# மொரவெலவ பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 22 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டெம்பர் 05 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

(ஆ) நிதிசார் கூற்றுக்களின் பிரதான உறுப்புகளான காசுப்பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதன மாற்றக் கூற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகளும் நிதிசார் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மொரவெவ பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொரவெவ பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்ட்டன

(அ) சபையால் அமுலாக்கப்படும் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி வேலை மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (NELSIP) மீளாய்வாண்டு முடிவிலான வங்கி மீதியாகிய ரூபா 9,879,611 மற்றும் நடைபெறும் வேலைகளுக்கான ரூபா 2,421,104 என்பன கணக்குகளில் இடப்படவில்லை.

(ஆ) காசேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவிலான வங்கி மீதி ரூபா 2,939,078 ஆகும். எனினும், அது ரூபா 2,347,014 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் நிதிசார் கூற்றுக்களில் வங்கி மீதியானது ரூபா 592,064 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் கடன் பதிவேட்டின்படி, மீளாய்வாண்டு முடிவிலான மீதி ரூபா 1,397,082 ஆகும். எனினும், அது ரூபா 1,203,392 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் நிதிசார் கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா 193,687 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்காமையால், 5 கணக்கீட்டு விடயங்களுக்குரிய ரூபா 27,799,475 க்கான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 512,284 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,828,062 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 89 | 42 | 112 |
| (ii) | குத்தகை வாடகை | 580 | 747 | 513 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 136 | 40 | 178 |
| (iv) | பிற வருவாய் | 2,673 | 2,924 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணத்தை இணங்கண்டு அதனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2014 மே 07 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தன.

## 2.3 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) 2013 ஜனவரி 10 ஆந் திகதிய பொருட் கணிப்பு அறிக்கைப் பிரகாரம் 14 வகைப்பொருட்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியும் 10 வகைப் பொருட்கள் ஏலத்திலிடப்பட வேண்டியும் 9 வகைப் பொருட்கள் அகற்றப்பட வேண்டியும் இருந்தன. இது தொடர்பான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவையின் 59 ஆம் விதிக்கமைய சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபார நிறுவனங்களது கணிப்பு மீளாய்வாண்டு முடிவு வரை மேற்கொள்ளப்படாதிருந்தது.

**2.4 வாகன நிர்வாகம்**

(அ) விபத்தினால் பெருமளவு இழப்பிற்குள்ளாகி அகற்றிவைக்கப்பட்ட கிழக்கு மாகாண தலைமைச் செயலாளருக்குரிய கெப் வண்டி ரூபா 1.8 மில்லியன் செலவில் 2012 மே 24 அன்று பழுதுபார்க்கப்பட்டுச் சபையால் பயன்படுத்தப்பட்டபோதும், அதனைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

வேறு 17 செலவினத் தலைப்புகளது ரூபா 1,068,000 மேற்படி பழுதுபார்த்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதால், அச் செலவினத் தலைப்புகளின் வாயிலாகச் செய்யப்படவிருந்த கட்டிடப் பழுதுபார்ப்பு, நீர் சுகாதாரப் பாதுகாப்பு, உள்ளூராட்சி கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் மூலதனச் செலவினம் ஆகிய நோக்கங்களைச் சபையால் நிறைவேற்ற முடியாது போயிற்று.

(ஆ) கணக்காய்வுத் தினமான 2014 மே 07 ஆந் திகதியளவிலும் சபைக்குரிய கெப் வண்டிக்கான சிறு பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், வாகனம் பாவனையிலிருந்து நீக்கப்பட்டு 8 மாதங்களுக்கு அதிகமாக வாகனப் பிரிவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**2.5 ஒப்பந்த நிர்வாகம்**

**2.5.1 நூலகம் ஒன்றை நிர்மாணித்தல்**

தேசத்துக்கு மகுடம் செயற்திட்டத்தின் மூலம் புதிய நூலகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 7,048,316 (பெறுமதிசேர் வரி நீங்கலாக) பெறுமதியில் 3 மாதங்களுக்குள் நிர்மாண வேலை முடிவுறும் அடிப்படையில் 2013 ஜனவரி 22 ஆந் திகதியன்று ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தகாரரால் 2013 பெப்ரவரி 12 அன்று ரூபா 2,421,104 க்கான செய்த வேலைகளது பெறுமதியைக் குறிக்கும் விலைப்பட்டியலுக்கு 14 மாதகால தாமதத்தின் பின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பெறுபேறாக ஏறக்குறைய ஓராண்டாக ஒப்பந்தகாரர் நிர்மாண வேலையை மேற்கொள்ளாதிருந்தார்.

(ஆ) ரூபா 352,420 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி 2013 ஏப்ரல் 23 அன்று முடிவடைந்திருந்தது. எனினும், அதனை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.5.2 எதாபெந்திவெவ பிரதான வீதியை நிர்மாணித்தல்**

(அ) இவ்வீதியின் முதல் கட்ட வேலையாக 2 கிலோ மீட்டருக்குக் கற்களைப் பரப்பி, தார் பரவி, நிர்மாண வேலையைச் செய்வதற்கு ரூபா 12,946,957 பெறுமதியில் (பெறுமதிசேர் வரி நீங்கலாக) 3 மாதங்களுக்குள் நிர்மாண வேலையை முடிப்பதெனும் அடிப்படையில் 2012 ஜனவரி 30 அன்று ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வீதி நிர்மாண வேலையினது செயற்திறன் திருப்திகரமாக அமையாததால் 2012 நொவெம்பர் 9 அன்று ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் 2014 மார்ச் 30 ஆந் திகதியள்று ரூபா 18,826,970 (பெறுமதிசேர் வரி நீங்கலாக) ஒப்பந்தப் பெறுமதியில் மற்றுமொரு ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. வழங்கல் நடவடிக்கைகளின்போது ஒப்பந்தகாரர்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்யாது போனமையால் ரூபா 5,880,013 மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த காலத்திற்குள் நிர்மாண வேலையை முடிக்க முடியாதுபோனமைக்கும் இது காரணமாயிற்று.

(ii) தேசிய போட்டியுடனான கூறு விலைக் கோரல்களுக்கான சாதாரண ஒப்பந்த நிபந்தனை 60.1 க்கமைய, ஒப்பந்தத்தை இடைநிறுத்தியதன் பின்னர் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அல்லது கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவற்றைக் காட்டும் பொறியியலாளரது சான்றிதழைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) ஒப்பந்தகாரரை வேலை மறுக்கப்படுபவர்க்கான பட்டியலிலிடச் சபை தீர்மானித்தபோதும், அதனை நிர்மாண வேலை மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்திற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 மே 31 ஆந் திகதியன்று இவ்வீதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கற்களைப் பரப்பி, தார் பரவி, நிர்மாண வேலையை மேற்கொள்வதற்கான 5 மாதங்களுக்குள் முடிவுற வேண்டிய அடிப்படையிலான ஒப்பந்த உடன்படிக்கை

ரூபா 18,046,600 (பெறுமதிசேர் வரி நீங்கலா) ஒப்பந்தப் பெறுமதியில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) இவ் வீதியினது நிர்மாண வேலைச் செயற்திறன் திருப்திகரமாக அமையாததால், 2012 ஒக்டோபர் 8 அன்று ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டு மற்றுமொரு ஒப்பந்தகாரருடன் ரூபா 19,557,095 க்கான (பெறுமதிசேர் வரி நீங்கலாக) உடன்படிக்கை 2014 மார்ச் 13 ஆந் திகதியன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. வழங்கல் நடவடிக்கையின்போது ஒப்பந்தகாரர்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் கூடிய தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யாதால் மேலதிகமாக ரூபா 1,510,495 கொடுப்பனவு செய்தமையும் குறித்த காலத்திற்குள் நிர்மான வேலை முடிவடையாமையும் காரணங்களாக அமைந்தன.

(ii) ஒப்பந்தம் இடைநிறுத்தப்படும் வேளையில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,954,923 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தேசிய போட்டியுடனான கூறு விலைக் கோரலின் 60.1 க்கமைய ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அல்லது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பெறுமதியைக் குறிக்கும் பொறியியலாளரிள் சான்றிதழைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) செயலாற்றல் பிணைமுறியான ரூபா 902,330 க்கான கால அவகாசம் முடிவடைவதற்கு முன்னர் அதனைப் பணமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபை அத்தொகையை இழந்திருந்தது.

(iv) ஒப்பந்தக்காரரை வேலை மறுக்கப்படுவதற்கான பட்டியலிடச் சபை தீர்மாணித்த போதும், அதனை நிர்மாண வேலை மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்திற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று தரம் | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 09 | 04 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 08 | 08 | - |
| | மொத்தம் | 18 | 13 | 05 |

முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 2 மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் பதவிகள் 3 என வெற்றிடங்கள் நிலவின.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனிதவள முகாமைத்துவம்